9th July 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி இப்பொழுது முடிவு ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

Selections for Government service (police verification)

* 196 *Q*.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether persons belonging to certain political parties are debarred from selections for the posts for which verification by the police is conducted before a candidate is appointed; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

The Cauvery basin (oil)

* 197 *Q*.—SRI M. KALYANASUNDARAM :
SRI RAMA ARANGANNAL :
SRI A. K. SUBBIAH :
SRI K. A. MATHIALAGAN :
} **Will the Hon.** the Minister for Industries be pleased to state the present stage of the scheme for exploration of oil in the Cauvery basin?

THE HON. SRI R. VENKATARAMAN : Seismic survey of certain portions of the Cauvery basin carried on by the Oil and Natural Gas Commission of the Government of India is still in progress and is likely to continue for some more time.

திரு. சா. கணேசன்: தேவக்கோட்டை பகுதியில் இது மாதிரி எண்ணெய் வளம் நிரம்ப இருக்கிறது என்று அந்த ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் எண்ணெயின் மாதிரியையும் அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தார் என்று செய்திகள் வந்தன. அதுபற்றி எதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அதனுடைய பயன் என்ன? விளைவு என்ன என்று அரசாங்கம் கருதுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி தகவல் ஜியலாஜிகல் டிபார்ட்மெண்டிலிருந்து வரவில்லை. ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸரிடமிருந்து வருவதைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது நமக்கு இருக்கின்ற தகவல் பூராவும், 'காவிரி பேஸின்' என்று சொல்கிற தஞ்சை ஜில்லாவும், திருச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும், வங்காளக்குடா அருகிலுள்ள பகுதியும்தான். இவைதான் எண்ணெய் இருக்கக்கூடிய இடங்கள் என்று சொல்லப்படுகிறது.

திரு. சா. கணேசன் : நில நூல் வல்லுநர்கள் முடிவுதான் சரியானது என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் சென்று காணவோ கவனிக்கவோ முடியாத இடங்களிலே, 'இத்தகைய வாய்ப்புகள் இருக்கின்றன' என்று அரசாங்க அதிகாரிகள் எடுத்துக் காட்டுவார்களானால், அதை நில